தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22-4-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஏப்ரல் 2016 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களின் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறித்து வேளாண்மைப் பல்கலைக் கழக பயிர் பாதுகாப்பு மையம் வெளியிடும் செய்திக் குறிப்பு: பயிர்களில் பூச்சி மற்றும் நோயின் தாக்குதல் பொருளாதார சேதநிலைக்கு குறைவாகவே காணப்படுகின்றது. ஆனால் சாறு உறுஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**நெற்பயிர்**

நெற்பயிரில் கோயம்புத்தூர், ஈரோடு, தர்மபுரி, கரூர், திருவள்ளூர், புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இலைச் சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுபடுத்த விளக்குப் பொறிகளை அமைத்து அந்த பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம் மற்றும் வேப்பங்கொட்டை சாறு 5 சதக் கரைசலைத் தயாரித்து பயிர்களில் தெளிக்கவும். பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில் இரசாயன பூச்சி கொல்லியான கார்டாப் ஹைட்ரோகுளோரைட் 50 % எஸ்.பி 400 கி / ஏக்கர் அல்லது குளோர்பைரிபாஸ் 20 % இ.சி. 500 மில்லி / ஏக்கருக்கு தெளிக்கவும்.

தமிழ்நாட்டில் நெல் விளையக்கூடிய பெரும்பாலான மாவட்டங்களில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த மேங்கோசெப் 400-500 கிராம் / ஏக்கர் என்ற முறையில் கலந்து 2 அல்லது 3 முறை 10-15 நாட்கள் இடைவெளியில் நோய் தாக்குதலுக்கேற்ப தெளிக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**நிலக்கடலை**

கோயம்புத்தூர், ஈரோடு, திருநெல்வேலி, இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் நிலக்கடலைப் பயிரில் இலைச் சுருட்டுப்புழுவின் தாக்குதல் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த விளக்குப்பொறிகளை வைத்து அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தைக்

கண்காணிக்கவும். தேவைப்படும் பட்சத்தில் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் தயாரித்துத் தெளிக்க வேண்டும்.

**கரும்பு**

கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் கரும்பில் இடைக் கணுப்புழுக்களின் தாக்குதல் பரவலாகக் காணப்படுகின்றது. இவற்றைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 சி.சி. என்றளவில் 15 நாட்கள் இடைவெளியில் 5-6 முறை விடுவிக்க வேண்டும்.

**பருத்தி**

திருநெல்வேலி, தர்மபுரி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பருத்தி செடியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றின் நடமாட்டத்தை மஞ்சள் நிற ஒட்டும் பொறியை வைத்துக் கண்காணிக்க வேண்டும். தேவைப்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் தயாரித்து பயிர்களில் தெளிக்கலாம்.

**சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கான முக்கிய அறிவிப்பு**

தமிழ்நாட்டில் தொடர்ந்து வறண்ட வானிலை தென்படுவதால் சாறு உறிஞ்சும் பூச்சிகளான பப்பாளி மாவுப்பூச்சி, சுருள் வெள்ளை ஈயின் தாக்குதல் விவசாய மற்றும் காய்கறிப் பயிர்களில் அதிகமாகத் தென்பட வாய்ப்புள்ளது மற்றும் பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாக வாய்ப்புள்ளது.

மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிரிடும் விவசாயிகள் பப்பாளி மாவுப் பூச்சியின் தாக்குதலைக் கண்காணிக்கவும். இவற்றை ஒட்டுண்ணிகளின் மூலம் கட்டுப்படுத்தவும்.

மேலும் இதர சாறு உறிஞ்சும் பூச்சிகளின் சேதத்தை குறைக்க வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் அல்லது கடைகளில் கிடைக்கும் வேம்பு சார்ந்த மருந்துகளை வாங்கி பயிர்களில் தெளிக்கவும்.

மேலும் விவரங்களுக்கு தலைவர், பூச்சியியல் துறை (அ) நோயியல் துறை, கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை அணுகவும்.

**தகவல்**

இயக்குநர்,
பயிர் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்